11 பிப்ரவரி 2024
பொதுக்காலம் ஆண்டின் 6 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

மனித கோதரத்துவத்தைக் கொண்டாடுதல்

# நாம் தனித்திருக்க அல்ல; ஒன்றாக இருக்கவே படைக்கப்பட்டோம்

திருஅவை இன்று அனைத்துலக நோயாளர் தினத்தைக் கொண்டாடுகிறது. இந்த தினம் 1992 ஆம் ஆண்டு புனித 2 ஆம் ஜோன் போல் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இது நோயுற்றவர்களுக்காக குறிப்பாக மிகவும் பாதிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, இருக்கும் நோயாளிகளுக்காகவும், மேலும் நோயாளிகளைப் பராமரிக்கும் உதவியாளர்கள், நோயாளிகளுக்காகவே தங்களை அர்ப்பணித்துகொண்ட சுகாதாரப் பணியாளர்களுக்காகவும் அவர்களின் சேவைக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருப்பதற்காகவும் இந்த நாள் ஏற்படுத்தப்பட்டது.



இந்த ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள கருப்பொருள்: மனிதன், தனிமையாய் இருப்பது நல்லதல்ல" **உறவுகளைக் குணப்படுத்துவதன் மூலம் நோயாளிகளைக் குணப்படுத்துதல்" அனைத்துலக நோயாளர் தினத்திற்காக திருத்தந்தை கடவுளுடனும் மற்றவர்களுடனும் நமது உறவுகளைக் குணப்படுத்தும் ஆற்றலைப் பற்றி பேசுகிறார்.** உறவுகள், நட்புறவு, அன்பு ஆகியவற்றைக் கொடுப்பதிலும் பெறுவதிலும் உள்ள முழு நிறைவான நம் வாழ்வு திரித்துவத்தின் உருவகத்தில் பிரதிபலிக்கிறது. நாம் தனித்திருப்பதற்கு அல்ல, ஒன்றாக இருக்கவே படைக்கப்பட்டோம்.

நோயுற்றவர்களைக் கவனிப்பது என்பது அவர்களைக் கவனித்துக் கொள்வது மட்டுமல்ல; நோயாளிகள் கடவுளோடும், மற்றவர்களோடும், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சுகாதாரப் பணியாளர்கள், படைப்புகள் மற்றும் தங்களோடும் நல்ல உறவு கொண்டிருக்கவேண்டும். துயரத்தில் இருப்போர் குறிப்பாக தனிமையில் வாடுவோர், விளிம்பு நிலையிலும் ஒதுக்கிவைக்கப்பட்டும் இருப்போர் ஆகியோரைக் கவனித்துகொள்ள நம்மை அழைக்கிறார்.

நற்செய்தியில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மனிதனுக்கு இயேசு அக்கறைக் காட்டுவதை வாசிக்கிறோம். சில யூத சட்டங்களின்படி, (இன்றைய முதல் வாசகத்தில் குறிப்பிட்டுள்ளபடி) தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை அவர்கள் "அசுத்தமானவர்கள்" என்று சமூகத்திலிருந்து வெளியே ஒதுக்கி வைத்தார்கள். அவர்கள் தனிமையில் வாழ்ந்தாக வேண்டிய கட்டாயம் இருந்தது. இருப்பினும் இயேசு அந்த மனிதனை ஒதுக்கித் தள்ளாமல் அதற்குப் பதிலாக, அந்த மனிதனை நெருங்கி வர அனுமதிப்பதுமட்டுமல்ல, அவரைத் தொட்டு குணப்படுத்தவும் தம் கைகளை நீட்டினார்.

இந்த மாதத்தில் நோயுற்றவர்களிடமும் தனிமையில் இருப்பவரிடமும் அக்கறை மற்றும் நம் ஒற்றுமையைக் காட்ட பலவழிகள் உள்ளன. நோயுற்றவர்களை, நம் அன்புக்குரியவர்களை சந்திப்பது. நோயாளிகளைக் கவனித்துக்கொள்ளும் தொண்டு நிறுவனத்திற்கு நம்மாலான நன்கொடை தருவது மருத்துவமனை, முதியோர் இல்லத்திற்குச் சென்று தன்னார்வத்தொண்டு செய்வது அல்து ஈடுபாடு காட்டுவது, பங்கு, அதிச வில் நோயுற்றோருக்குப் பணிசெய்ய பணிக்குழுவை உருவாக்குவது, நோயுற்றவர்களுக்காக இறைவேண்டல் செய்வது ஆகியவை அடங்கும்.

**நாம் அன்பிற்காகப் படைக்கப்பட்டோம்; மேலும் சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமைக்காக அழைக்கப்படுகிறோம்**

திருத்தந்தை பிரான்சிஸ் – 32 ஆம் அனைத்துலக நோயுற்றோர் தினத்திற்கான செய்தி







### இன்றைய இறைவார்த்தை:

லேவியர்: 13: 1-2, 45-46

திருப்பாடல்: 31: 1-2, 5, 11

1 கொரிந்தியர் 10: 31-11,1

மாற்கு 1: 40-45

INTERNAL CIRCULATION ONLY
BUL 06/2024

**வெளியீடு:** மாறை மாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
**மின்னஞ்சல்:** api@archkl.org